தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 13-3-2016
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை செய்த கொத்தமல்லியை உடனே விற்கவும்

இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் நறுமணப் பயிர்களில் கொத்தமல்லி முக்கியமானாதாகும். இராஜஸ்தான், ஆந்திரபிரதேசம், குஜராத் மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில், முக்கியமாக இராமநாதபுரம், விருதுநகர், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கொத்தமல்லி பரவலாக சாகுபடி செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டின் மொத்த கொத்தமல்லி சாகுபடியில் மேலே குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களில் மட்டும் 85 சதவீதம் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில், கொத்தமல்லியின் சாகுபடி அதிகப்படியாக மானாவாரி நிலத்தில் பயிரிடப்படுகின்றது.

தமிழ்நாடு தோட்டக்கலை துறை கணக்கீட்டின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் 2015ம் ஆண்டு ஜனவரியில் கொத்தமல்லியின் விதைப்பு 1,492 எக்டராக உள்ளது. இது சென்ற வருடத்தை ஒப்பிடுகையில் 750எக்டர் குறைவாக உள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் கொத்தமல்லி 1,250 எக்டர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. சென்ற ஆண்டை ஒப்பிடுகையில் 500 எக்டர் குறைவாக உள்ளது. நமது மாநிலத்தில் ஏற்ப்பட்டுள்ள கொத்தமல்லி உற்பத்தி பற்றாக்குறையை வட இந்தியாவிலிருந்து வருகின்ற கொத்தமல்லியால் ஈடு செய்யப்படுகின்றது.

சந்தையின் தற்போதைய விலை நிலவரத்தின் படி, குவிண்டாலுக்கு கொத்தமல்லி விதை ரூ.7,500 முதல் 7,750 வரை உள்ளது. கொத்தமல்லி அறுவடை முடிந்துள்ளதால் பிறமாநிலத்திலிருந்து சந்தைக்கு அதன் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பின் வரும் மாதங்களில் கொத்தமல்லி விதையின் விலை குறைய வாய்ப்புள்ளது.

விவசாயிகள், வரும் மார்ச் - ஏப்ரல், 2016 அறுவடை கால விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 12 வருடங்களாக விருதுநகர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிவரும் கொத்தமல்லி விலை நிலவரம் மற்றும் வர்த்தக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தகஆ ய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் அறுவடைக்கு வரும் கொத்தமல்லியின் பண்ணை விலை குவிண்டாலுக்கு ரூ.7,500 முதல் ரூ.8,100 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் அறுவடை செய்த கொத்தமல்லியை உடனே விற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405

**மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசைன மற்றும் நறுமணப் பொருட்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-6611284

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்